# CANADA வாக்குகள்

## 2015 மத்திய அரசுத் தேர்தல் செய்திஅறிக்கை: குடிவரவாளர் சனத்தொகை, துரித நுழைவு

## பிரச்சினை

அண்ணளவாக 250,000 புதிய குடிவரவாளர்கள் கனடாவுக்கு வருடா வருடம் வருவதால், நாட்டின் சமூக, பொருளாதார, அரசியல் நிலைகளில் தொடர்ந்தும் குறிப்பிடத்தக்கதொரு தாக்கத்தை குடிவரவு ஏற்படுத்துகின்றது. நாடு முழுவதும் துடிப்புள்ள சமூகங்களைக் கட்டியெழுப்பவும், உறுதியான தொழிலாளச் சமூகம் ஒன்றை உருவாக்குவதற்கும், பல தசாப்தங்களாக புதிய கனேடியர்கள் உதவியுள்ளனர், அத்துடன் எதிர்காலத்தில் எங்களுடைய கூட்டு வளர்ச்சி மற்றும் செழிப்புக்காக அவர்கள் தொடர்ந்தும் பங்களிப்பார்கள்.

## நிலைமை

2008ல் இருந்து, அமைச்சரவை அறிவுறுத்தல்களைப் பயன்படுத்துவதன் மூலம், குறிப்பிடத்தக்கதொரு அமைப்பு மாற்றத்தை கனடாவின் குடிவரவு அமைப்பில் மத்திய அரசாங்கம் தொடங்கியுள்ளது, இந்த உத்தியூடாக, பாராளுமன்றத்துக்கூடாக அனுமதி பெற வேண்டிய தேவையின்றி கனடா குடிவரவுக் கொள்கை மற்றும் நடைமுறை பற்றி குடிவரவு அதிகாரிகளுக்கு நேரடியாக அறிவுறுத்தல்களை வழங்கும் அதிகாரத்தை கனடா குடியுரிமை மற்றும் குடிவரவு அமைச்சர் பெற்றிருக்கின்றார். இந்தச் செயல்முறை குடிவரவுக் கொள்கையில் துரிதமான மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கின்றது; குடிவரவில் நிலையான தாக்கத்தை ஏற்படுத்தும் மாற்றமாக இது இருப்பதால், வரவிருக்கும் தசாப்தங்களுக்கான குடிவரவாளர்களின் சனத்தொகையையும் இது மாற்றுகின்றது.

ஆர்வத்தை வெளிப்படுத்தல் (அல்லது துரித நுழைவு) மாதிரி ஒன்றைக் கனடா பயன்படுத்தல், இந்த மாற்றங்களுக்கு ஓர் உதாரணமாகும். இதன்படி, கனடாவுக்கு குடிவர விண்ணப்பிக்கும்படி அழைப்பதற்கு முன்பாக,"ஆர்வத்தை வெளிப்படுத்தும்" படிவமொன்றை, குடிவர விரும்புபவர்கள் பூரணப்படுத்த வேண்டும். இந்த மாதிரியின் கீழ், குடிவரவு விண்ணப்பத்தின் மற்ற அனைத்து அம்சங்களிலும் தகுதிபெற்றவர்கள், பரிசோதிக்கப்பட்டு, கனடாவின் மாகாண மற்றும் பிரதேசங்களினதும், பெரும் தொழில்வழங்குநர்கள் மற்றும் பணியமர்த்துபவர் குழுக்களினதும் பொருளாதார மற்றும் தொழில் தேவைகளின் அடிப்படையில் குடிவர விண்ணப்பிக்கும்படி குடிவர விரும்புபவர்கள் அழைக்கப்படுகின்றார்கள்.

தற்போதைய பொருளாதார நிலைமையின் அடிப்படையில், மிகப் பொருத்தமான குடிவருபவர்களைத் தேர்ந்தெடுக்கும், மிகவும் செயல்திறனான மற்றும் வினைத்திறனான குடிவரவு முறையாக இருப்பதே, இந்த மாற்றத்தின் உள் நோக்கமாகும். இருந்தாலும், பொருளாதர மற்றும் தொழிலாளர் தேவையை மட்டுமே நோக்கி வடிவமைக்கப்பட்டுள்ள குடிவரவு அமைப்பை நோக்கிய குறிப்பிடத்தக்கவொரு மாற்றத்தையே இந்த மாதிரி பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. வினைத்திறன் என்ற பெயரில், கனேடியர்களின் கைகளிலிருந்து வெளியே எடுத்து, தொழில்வழங்குநர்கள் மற்றும் பணியமர்த்துபவர்களுக்கான ஆலோசனைக் குழுக்களின் கைகளில் குடிவரவுக்கான முடிவுகளை எடுக்கும் அளவுக்குமீறிய அதிகாரத்தை, துரித நுழைவு மாதிரி கொடுத்திருப்பதாக மேலும் கவலைகள் உள்ளன.

செயல்திறனுடனும் வினைத்திறனுடனும் இருக்கும் குடிவரவு அமைப்பு ஒன்று கனடாவுக்குத் தேவை. ஆனால் நாட்டின் சமூக மற்றும் பொருளாதாரத் தேவைகளை ஆதரிக்கும் அமைப்பு இருப்பதை உறுதிப்படுத்துவதற்கு, குறிப்பிடத்தக்க சரிபார்ப்புக்களும் சமநிலைகளும் இருத்தல் அவசியமாகும்.

## கேள்விகள்

1. உங்களுடைய அபிப்பிராயப்படி, கனடா குடிவரவுத் திட்டத்தின் ஒட்டுமொத்தமான குறிக்கோள் என்ன?

2. துரித நுழைவு (Express Entry) மாதிரி மூலமான தெரிவுச் செய்முறையில், ஏற்படக்கூடிய சமச்சீரற்ற தன்மைகளை நீங்கள் எப்படிக் கையாள்வீர்கள்?

3. அமைச்சரவை அறிவுறுத்தல்களைப் பயன்படுத்துவதன் மூலம், குடிவரவு அமைச்சருக்கு அதிகளவு அதிகாரத்தைக் கொடுப்பது பொருத்தமானது என நீங்கள் நம்புகிறீர்களா?

## ஆதாரவளங்கள்:

**இந்தத் தொடர் பற்றிய மேலதிக தகவல்கள் மற்றும் கூடுதலான தரவுத்திரட்டுத் தாள்களுக்கு:** http://spno.ca/canada-votes-2015

இந்தத் தொடரைத் தயாரித்தவர்கள்: Canadian Council on Social Development, Community Development Council Durham, CommunityDevelopment Halton, Edmonton Social Planning Council, Saint John Human Development Council, Social Planning and Research Council ofBC,SocialPlanningandResearchCouncilofHamilton,SocialPlanningCouncil ofCambridgeandNorthDumfries,SocialPlanningCouncil of Kitchener-Waterloo, Social Planning Network of Ontario, & Social Planning Toronto.

**மொழிபெயர்ப்பு : MCIS மொழிச்சேவைகள் - இலாபகரமற்ற அமைப்பு**

தேர்தல் நாள்: ஒக்ரோபர் 19, 2015